எஸ் பேங்க் வழங்கும் கிரிடிட் கார்டு புராடெக்டில் ஆர்வமுள்ள எஸ் பேங்க் கிரிடிட் கார்டுகள்/ கார்டு உறுப்பினர்கள் / கிரிடிட் கார்டு விண்ணப்பதாரர்கள்/ எஸ் பேங்க் வாடிக்கையாளர்கள் / பொதுமக்கள் அனைவருக்கும் இந்த 'மிகவும் முக்கியமான வரையறைகளும் நிபந்தனைகளும்' ("MITC") பொருந்தும். எஸ் பேங்கின் சுய விருப்பம் மற்றும் அவ்வப்போது நடைமுறையிலிருக்கும் பொருந்தும் சட்ட விதிமுறைகளுக்கு இணங்கி மாற்றங்களுக்கு உள்ளாகும் இந்த MITC வரையறைகளை கார்டு உறுப்பினர் ஒப்பந்த வரையறைகள் மற்றும் நிபந்தனைகள் ('கார்டு உறுப்பினர் ஒப்பந்தம்') விதிமுறைகளுடன் சேர்த்து படிக்க வேண்டும். ஒருவேளை MITC மற்றும் கார்டு உறுப்பினர் ஒப்பந்த விதிமுறைகளில் ஏதேனும் முரணானவை இருந்தால், கீழ் குறிப்பிட்டுள்ள விளக்கியிருக்காத பட்சத்தில் கார்டு உறுப்பினர் ஒப்பந்த விதிமுறைகள் பொருந்துவதாகக் கருதப்படும்.

அனைத்து மூலதன விதிகளும் பயன்படுத்தப்பட்டு இங்கே விளக்கம் கொடுக்கப்பட்டிருக்காத பதங்களுக்கு, கார்டு உறுப்பினர் ஒப்பந்தத்திலுள்ள பொருள்கள் பொருந்தும்.

## 1. கட்டணம் மற்றும் செலவுகள்

### அ. ஆண்டு உறுப்பினர் கட்டணம்

பிரைமரி மற்றும் ஆட்-ஆன் கிரிடிட் கார்டு(கள்) மீது ஆண்டு உறுப்பினர் கட்டணம் பொருந்தும். எஸ் பேங்க் கிரிடிட் கார்டு வசதி பெற்றிருக்கும் சலுகை அடிப்படையில் கார்டு உறுப்பினர் செலுத்த வேண்டிய கட்டணங்கள் வித்தியாசப்படலாம். கிரிடிட் கார்டுக்கு விண்ணப்பம் செய்துகொள்ளும் போதே இந்த விபரம் தெரிவிக்கப்படும். கார்டு வழங்கப்படும்போது/புதுப்பிக்கப்படும்போது இக்கட்டணங்கள், ஆட்-ஆன் கார்டுகள் ஏதாவது பெற்றிருந்தால் அதற்கான கட்டணங்கள் உட்பட, கார்டு வழங்கப்பட்ட மாதத்திற்கான பில்லில் சேர்த்து வசூலிக்கப்படும். கிரிடிட் கார்டு வசதியை முடித்துக்கொள்வதால் கட்டணங்கள் திருப்பி செலுத்தப்படாது.

### ஆ. ரொக்கம் எடுத்தல் கட்டணங்கள்

இந்தியாவிலும் வெளிநாடுகளிலும், கிரிடிட் கார்டைப் பயன்படுத்தி எப்பொழுது வேண்டுமானாலும் ஏடிஎம்களிலிருந்து கார்டு உறுப்பினர்கள் ரொக்கம் எடுக்கும் வசதி பெற்றிருப்பார்கள். இதற்காக, நடவடிக்கை செய்யப்பட்ட அடுத்த மாத பில்லில் எடுக்கப்பட்ட ரொக்க தொகை மீது 2.5% (குறைந்த பட்சம் ரூ.300) நடவடிக்கை கட்டணம் சேர்க்கப்படும். இந்த நடவடிக்கை கட்டணம் எஸ் பேங்க் சுய விருப்பத்தின்படி மாற்றப்படலாம். இது போன்ற அனைத்து ரொக்க நடவடிக்கைகள் மீது ரொக்கம் எடுத்த தேதியிலிருந்து அது முழுவதும் திருப்பிச் செலுத்தப்படும் தேதி வரையில் சுழல் கடன் (செலவுகள் அட்டவணையைப் பார்க்கவும்) வசதிக்குப் பொருந்தும் நிதிக் கட்டணம் வசூலிக்கப்படும். எஸ் பேங்கின் சுய விரும்பத்தின் படி நிதிக்கட்டணம் மாற்றத்திற்கு உட்பட்டிருக்கும்.

### இ. இதர பிற செலவுகள்

- எஸ் பேங்க் கார்டு உறுப்பினர்களுக்கு வழங்கும் குறிப்பிட்ட சேவைகளுக்கு, அல்லது கார்டு உறுப்பினர்கள் கார்டு கணக்கில் தவணை தவறுதல் நிகழ்வுகளுக்கு அவ்வப்போது பொருந்தும் கட்டணங்கள் மற்றும் செலவுகளைச் செலுத்த வேண்டும்.
- கெடு தேதி வரையில் குறைந்த பட்ச தொகை கூட செலுத்தப்படாத போது, தாமதித்துப் பணம் செலுத்தல் கட்டணங்கள் வசூலிக்கப்படும். இக்கட்டணத்தைத் தவிர்த்திருக்க, கெடு தேதியில் அல்லது அதற்கு முன்னதாக எஸ் பேங்க் கணக்கில் நிபந்தனையற்ற தொகை வரவு வைக்கப்பட்டிருக்க வேண்டும். இந் நிகழ்வுகளில் தாமதித்துப் பணம் செலுத்தல் கட்டணங்கள் பொருந்தும்:

| அறிக்கை நிலுவை தொகை | தாமத பணம் செலுத்தல் கட்டணங்கள் |
|---|---|
| ₹100/-க்கும் குறைவு | இல்லை |
| ₹100/- முதல் ₹500/- வரை | ₹100/- |
| ₹501/- முதல் ₹5,000/- வரை | ₹400/- |
| ₹5,001/- முதல் ₹20,000/- வரை | ₹500/- |
| ₹20,000/- மற்றும் மேற்பட்டு | ₹700/- |

- சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி), உள்ளிட்ட மறைமுக வரிகள் அனைத்தும் வசூலிக்கப்படும் கட்டணங்கள் மற்றும் செலவுகள் மீதும் மற்றும் நடப்பிலுள்ள சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்ட அனைத்து தொகைகள் மீதும் வசூலிக்கப்படும். (ஜிஎஸ்டி 01 ஜூலை 2017 தேதியிலிருந்து பொருந்தும்)
- கட்டணங்கள் அல்லது செலவினங்கள் தொகை அளவுகளை அவ்வப்போது திருத்தி அமைக்கும் அல்லது புதிய கட்டணங்கள் அல்லது செலவினங்களை, தன் சுய விருப்புரிமை அடிப்படையில் அறிமுகம் செய்யும் உரிமையை எஸ் பேங்க் தன்னிடம் தக்க வைத்துக் கொள்கிறது. இது போன்ற மாற்றங்களை குறைந்த பட்சம் 30 நாட்கள் முன்னறிவிப்பு அறிக்கை கொடுத்த பிறகு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும்.

### ஈ. வட்டியில்லா காலவரை

குறிப்பிட்ட கிரிடிட் கார்டு திட்டத்திற்கு உட்பட்டு (இத்துடன் சேர்க்கப்பட்டிருக்கும் கட்டணங்கள் அட்டவணையைப் பார்க்கவும்), கார்டு உறுப்பினர் 50 நாட்கள் வரை வட்டியில்லாத காலவரை சலுகையைப் பெற்றுக்கொள்ள முடியும். கடந்த மாத அறிக்கை தொகை முழுவதும் அதன் கெடு தேதிக்குள் செலுத்தப்பட்டிருக்காத பட்சத்தில், இந்த வட்டியில்லாத காலவரை சலுகை பொருந்தாது. ஒருவேளை கார்டு உறுப்பினர் ஏடிஎம்-லிருந்து தொகை எடுத்திருக்கும் பட்சத்தில், இச் சலுகை பொருந்தாது..

வட்டியில்லா காலவரை நாட்களைக் கணக்கிடும் உதாரணம்:
ஒரு கிரிடிட் கார்டு தொகை செலுத்தவேண்டிய கடைசி நாள் 25-மே என்று வைத்துக்கொள்வோம், சென்ற மாத பில் தொகை முழுவதும் செலுத்தப்பட்டிருக்கிறது எனும் போது, தொகை செலுத்த கிடைக்கும் வட்டியில்லா காலவரை கெடு தேதி இவ்வாறு இருக்கும்:

1. 6-ஏப்ரல் தேதியில் வாங்கப்பட்ட செலவினத் தொகையை செலுத்தும் கெடு தேதி 6-ஏப்ரல் தேதி முதல் 25-மே தேதி வரை = 50 நாட்கள்
2. 17-ஏப்ரல் தேதியில் வாங்கப்பட்ட செலவினத் தொகையை செலுத்தும் கெடு தேதி 17-ஏப்ரல் தேதி முதல் 25-மே தேதி வரை = 39 நாட்கள்.

## 2. வரம்புகள்

- கார்டு உறுப்பினரின் கிரிடிட் வரம்பு மற்றும் தொகை எடுக்கும் வரம்புகளை (ஆட்-ஆன் கார்டு உறுப்பினர்கள் பிரைமரி உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் வரம்புகளைப் பகிர்ந்து கொள்வார்கள்) எஸ் பேங்க் தன் சுய விருப்பத்தின் படி நிர்ணயிக்கும். கிரிடிட் வரம்பு என்பது ஒரு காலக் கட்டத்தில் மொத்த தொகை நிலுவையில் இருக்க அனுமதிக்கப்படும் உச்ச வரம்பு ஆகும். கார்டு உறுப்பினருக்கு கார்டு வழங்கும் சமயத்திலும், அனுப்பப்படும் மாதாந்திர அறிக்கையிலும் இந்த வரம்பு தகவல் அறிவிக்கப்படும். அறிக்கை தயாரிக்கப்பட்ட சமயத்தில் வரம்புக்கு உட்பட்ட செலவிடப்படாத தொகை விபரமும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கும். ரொக்கம் எடுக்க அனுமதிக்கப்படும் தொகை வரம்பு. கேஷ் அட்வான்ஸ் லிமிட் என்பது எஸ் பேங்க் விவரிப்பது போல் அல்லது குறிப்பிட்டிருப்பது போன்ற தொகை அல்லது ரொக்கமாக மதிக்கப்படும் சம அளவு வசதியை ஒரு கார்டு உறுப்பினர் அவர்/அவள் தன் கார்டு கணக்கில் பயன்படுத்திக் கொள்ளலாம். கார்டு உறுப்பினரின் கிரிடிட் வரம்புக்கு ரொக்க வரம்பும் உட்பட்டிருக்கும். ரொக்கம் எடுக்கும் வரம்பு குறித்த கூடுதல் விபரங்களைத் தெரிந்துகொள்ள, தயவுசெய்து கட்டணங்கள் அட்டவணையைப் பார்க்கவும்.
- கார்டு உறுப்பினர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் ஒருவேளை கிரிடிட் வரம்புகளை மீறியதாக இருந்தாலும், சேவை வழங்கும் நோக்கத்துடன், எஸ் பேங்க் அவற்றிற்கு ஒப்பளிப்பு வழங்கலாம். இருந்தாலும், கார்டு கணக்கில் இது போன்ற வரம்பு கடந்த தொகை மீது மேல்பற்று கட்டணமாக 2.5% அல்லது ₹500 (எது அதிகமோ அது) வசூலிக்கப்படும்.
- கார்டு உறுப்பினரின் கார்டு கணக்கை எஸ் பேங்க் வழக்கமான கால இடைவெளிகளில் பரிசீலிக்கும். எஸ் பேங்கியின் சுய விருப்பத்தின்படி, உள்நிறுவன விதிமுறைகளுக்கு உட்பட்டு, கார்டு உறுப்பினரின் கிரிடிட் வரம்புகள் குறைக்கப்படலாம். இது குறித்த செய்தி ஒன்றும் அதன் காரணங்களும் எஸ்எம்எஸ் / மின்னஞ்சல் மூலமாகவும், தொடர்ந்து உறுதி செய்யும் வகையில் எழுத்து பூர்வமாகவும் அவருக்கு/ அவளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
- கிரிடிட் வரம்பை அதிகரித்துக்கொள்ள விரும்பும் உறுப்பினர், கார்டு உறுப்பினர்(கள்) வருவாய் ஆவணங்களைச் சமர்ப்பித்து எஸ் பேங்கிடம் கோரிக்கை செய்துகொள்ளலாம். எஸ் பேங்க் தன் சுய விருப்பத்தின்படி மற்றும் உறுப்பினர்(கள்) சமர்ப்பித்திருக்கும் ஆவணங்கள் அடிப்படையில் உறுப்பினரின் கிரிடிட் வரம்பை அதிகரிக்க ஒப்பளிக்கலாம்.
- கிரிடிட் கார்டைப் பயன்படுத்துவதன் மூலம் அவ்வப்போது உறுப்பினருக்கு வழங்கப்பட்டிருக்கும் கிரிடிட் வரம்புகளை அவர் ஏற்றுக்கொண்டிருப்பதாகக் கருதப்படும்.

## 3. நிதி கட்டணங்கள்

- கார்டு உறுப்பினர் ஒருவேளை நிலுவை தொகை முழுவதையும் செலுத்த விரும்பாத போது, நிலுவை தொகை மீது விதிக்கப்படும் அனைத்து நிதி கட்டணங்களும் மாதாந்திர சத விகித அடிப்படையில் நடவடிக்கை செய்யப்பட்ட தேதியிலிருந்தும், ரொக்கம் எடுக்கப்பட்ட தொகை மீதான கட்டணம் தொகை முழுவதும் செலுத்தப்படும் வரையிலும், வசூலிக்கப்படும். நிலுவை தொகை முழுவதும் செலுத்தப்படும் வரை, செலுத்தப்பட வேண்டிய நிதி கட்டணங்கள் கார்டு உறுப்பினர் கணக்கில் பற்று வைக்கப்பட்டு வசூலிக்கப்படும்.
- ரொக்கம் எடுக்கப்பட்ட தொகை மீதான நிதி கட்டணங்கள், நடவடிக்கை தேதியிலிருந்து ரொக்கத் தொகை முழுவதும் திருப்பிச் செலுத்தப்படும் வரையில் பொருந்தும்.
- நிலுவை தொகை பாக்கி செலுத்துவதை கார்டு உறுப்பினர் அடுத்த மாதத்திற்கு எடுத்துச் செல்லும் போது, அல்லது ரொக்கம் எடுக்கும் போது, நிலுவை தொகை மீது தினசரி சராசரி இருப்பு அடிப்படையில் நிதி கட்டண வீதம் கணக்கிட்டு முந்தைய நிலுவை தொகை முழுவதும் திருப்பிச் செலுத்தும் வரையில் வசூலிக்கப்படும்.
- நிதி கட்டணங்களும் இதர பிற கட்டணங்களும் எஸ் பேங்க் சுய விருப்பம் அடிப்படையில் மாற்றங்களுக்கு உட்படும் என்பதை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.

| தேதி | நடவடிக்கை | தொகை |
|---|---|---|
| 02-ஜூன் | ஆடை வாங்குதல் | ₹5000 |
| 14-ஜூன் | மளிகை பொருள்கள் வாங்குதல் | ₹1000 |
| 20-ஜூன் | அறிக்கை தேதி | மொத்த நிலுவை தொகை = ₹6000 செலுத்த வேண்டிய குறைந்தபட்ச தொகை = ₹300 |
| 10-ஜூலை | கார்டு கணக்கில் தொகை வரவு | ₹1000 (வரவு) |
| 14-ஜூலை | மளிகை பொருள்கள் வாங்குதல் | ₹1000 |
| 20-ஜூலை | அறிக்கை தேதி | மொத்த நிலுவை தொகை = ₹6296.59 செலுத்த வேண்டிய குறைந்தபட்ச தொகை = ₹314.8 |

**கீழே கொடுக்கப்பட்டிருக்கும் உதாரணம் சுழல் கடன் வசதிக்காக கணக்கிடப்படும் நிதி கட்டணங்களை விளக்குகிறது.**
கார்டு உறுப்பினர் அவர்/அவளுடை எஸ் பேங்க் கிரிடிட் கார்டு கணக்கில் முந்தைய நிலுவை தொகை அனைத்தையும் செலுத்தியிருக்கிறார் என்றும் வேறு தொகை எதுவும் பாக்கியில்லை என்றும் அனுமானிக்கப் பட்டிருக்கிறது. பிரதி மாதம் 20-ம் தேதியில் கார்டு உறுப்பினர் அறிக்கை தயாரிக்கப்படும். கார்டு உறுப்பினர் செய்திருக்கும் நடவடிக்கை பட்டியல்

கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

20-ஜூலை தேதியிட்ட அறிக்கையில், கார்டு உறுப்பினர் செலுத்த வேண்டிய மொத்த தொகைக்கான விவரங்களின் பகுதியாக இவை பட்டியலிடப்பட்டிருக்கும்:

வட்டி கணக்கிடுதல் = (நிலுவை தொகை x 2.75% மா.ஒ. x 12 மாதங்கள் x நாட்கள் எண்ணிக்கை)/365

அ) ₹5000 மீது வட்டி @ 2.75% மா.ஒ. 02-ஜூன் முதல் 09-ஜூலை வரை (38 நாட்கள்) = ₹171.78
₹1000 மீது வட்டி @ 2.75% மா.ஒ. 14-ஜூன் முதல் 09-ஜூலை வரை (26 நாட்கள்) = ₹23.51
₹5000 மீது வட்டி @ 2.75% மா.ஒ. 10-ஜூலை முதல் 20-ஜூலை வரை (11 நாட்கள்) = ₹49.73
₹1000 (புது செலவுகள்) @ 2.75% மா.ஒ. 14-ஜூலை முதல் 20 ஜூலை வரை = ₹6.33
மொத்த வட்டி = ₹251.35

ஆ) சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) 18% வட்டி தொகை மீது = ₹45.24

இ) நிலுவையிலிருக்கும் மொத்த அசல் தொகை = ₹6000 (₹1000 புது செலவுகள் + பாக்கி ₹5000 கடந்த மாத பில்லிங் பீரியடிலிருந்து)

ஆகையால் செலுத்த வேண்டிய மொத்த தொகை= (அ)+(ஆ)+(இ) = ₹6296.59

## 4. பில்லிங்

- கார்டு உறுப்பினருக்கு மாதந்தோறும் எஸ் பேங்க் மாதாந்திர அறிக்கையை அனுப்பி வைக்கும், இதில் கடந்த மாத அறிக்கையைத் தொடர்ந்து வரவு வைக்கப்பட்டவை மற்றும் கார்டு கணக்கில் பற்று வைக்கப்பட்டவை விபரங்கள் கொடுக்கப்பட்டிருக்கும். எஸ் பேங்க் பதிவேடுகளிலுள்ள தபால் முகவரி / மின்னஞ்சல் முகவரிக்கு கார்டு கணக்கு நடவடிக்கைகளைப் பட்டியலிட்டு மாதாந்திர அறிக்கையை தபால் மூலமாக / மின்னஞ்சல் வழியாக எஸ் பேங்க் அனுப்பி வைக்கும். ஒருவேளை பாக்கி தொகை ₹100 க்கும் குறைவாக இருந்து கார்டில் எந்த நடவடிக்கையும் செய்யப்படாத போது, மாதாந்திர அறிக்கை அனுப்பப்பட மாட்டாது.
- கார்டு உறுப்பினர்களுக்கு எஸ் பேங்க் சுழல் கடன் வசதி அளிக்கிறது. கிரிடிட் கார்டு அறிக்கையிலுள்ள நிலுவை தொகைக்கு எதிராக குறைந்த பட்ச நிலுவை தொகை (MAD), முழு நிலுவை தொகை அல்லது முழு நிலுவை தொகையில் குறைந்த பட்ச நிலுவை தொகைக்கு மிகையான பகுதி தொகையை கார்டு உறுப்பினர் செலுத்தலாம். பாக்கி தொகையை அடுத்த அறிக்கை காலவரைக்கு எடுத்துச் செல்லலாம். அடுத்த கெடு தேதிக்கு முன்னர் பாக்கி நிலுவை தொகையைச் செலுத்திவிட வேண்டும். தாமதித்து பணம் செலுத்துதல் கட்டணத்தைத் தவிர்க்க கெடு தேதிக்கு முன்னர் எஸ் பேங்க் கார்டு கணக்கில் தொகை வரவு வைக்கப்பட வேண்டும். கெடு தேதிக்கு முன்னர் கார்டு கணக்கில் தொகை வரவு வைக்கப்படுவதை உறுதி செய்யும் வகையில் கெடு தேதிக்கு போதுமான நாட்கள் முன்னதாகவே கார்டு உறுப்பினர்கள் தங்கள் உள்ளூர் காசோலைகளை சேகரம் பெட்டியில் சேர்த்துவிட வேண்டும்.
- மொத்த நிலுவை தொகையில் 5% குறைந்தபட்ச நிலுவை தொகையாக அல்லது ₹100 (எது அதிகமோ அது) கணக்கிடப்பட்டு அதனுடன் அனைத்து பொருந்தும் வரிகளும் இஎம்ஐ (இஎம்ஐ சார்ந்த புராடெக்டுகளில் மட்டும்) தொகையும் சேர்க்கப்படும். ஒருவேளை சென்ற மாதாந்திர அறிக்கையின் குறைந்த பட்ச நிலுவை தொகை செலுத்தப்பட்டிருக்காவிட்டால், கார்டு உறுப்பினரின் நடப்பு குறைந்த பட்ச நிலுவை தொகையுடன் கூட்டப்பட்டுவிடும், அத்துடன் கார்டு உறுப்பினருக்கு அனுமதிக்கப்பட்டிருக்கும் கிரிடிட் வரம்புக்கு மிகையான தொகையும் அத்துடன் கூட்டப்பட்டிருக்கும்.
- கிரிடிட் கார்டு நிலுவை தொகைக்கு எதிராகச் செலுத்தப்பட்ட பணம் செலுத்துதல் விபரங்கள் அதற்கு அடுத்த மாதாந்திர அறிக்கையில் காட்டப்பட்டிருக்கும்.
- கார்டு உறுப்பினரிடமிருந்து பெறப்படும் கார்டு நிலுவை தொகை சேவை வரி வட்டி கட்டணங்கள், சேவை செலவினங்கள் மற்றும் கட்டணங்கள் (உறுப்பினர் கட்டணம் உட்பட), அசல் தொகை என்று சென்ற அறிக்கை சுழற்சி மற்றும் நடப்பு அறிக்கை சுழற்சி என்று மேலே காட்டப்பட்டிருக்கும் வரிசையில் தொகைகள் வரவு வைக்கப்படும்.
- கார்டு கணக்கில் பணம் செலுத்துவதை கீழேயுள்ள வழிமுறைகளில் செலுத்தலாம்:
  - ⇨ எஸ் பேங்கில் கார்டு உறுப்பினர் கணக்கு வைத்திருந்தால், அவர்/அவள் தொகையை நெட்பேங்கிங் மற்றும்/அல்லது எஸ் பேங்க் ஏடிஎம்கள் மூலம் செலுத்தலாம். இவர்கள் வங்கியிடம் நிலைக்கட்டளை வசதியில் பதிவு செய்துகொண்டு கெடு தேதியில் எஸ் பேங்க் கணக்கிலிருந்து நேரடியாக கார்டு கணக்கில் நிலுவை தொகையை செலுத்திவிடலாம்.
  - ⇨ கார்டு உறுப்பினர் தங்கள் மற்ற வங்கி கணக்கிலிருந்து என்.இ.எஃப்.டி. மூலம் நிலுவை தொகையைச் செலுத்தலாம் **(IFSC code YESB0CMSNOC),** அல்லது மற்ற வங்கியின் நெட்பேங்கிங் கணக்கிலிருந்து பில் டெஸ்க் வசதியைப் பயன்படுத்தியும் தொகையைச் செலுத்த முடியும்.
  - ⇨ எஸ் பேங்க் கிளைகள் மற்றும் ஏடிஎம்களில் வைக்கப்பட்டிருக்கும் காசோலை சேகரம் பெட்டிகளில் கார்டு உறுப்பினர்கள் தங்கள் உள்ளூர் காசோலை (அல்லது கேட்பு வரையோலை) ஆகியவற்றைச் சேர்த்துவிடலாம். காசோலை/கேட்பு வரைவோலையில் YES BANK Credit Card Number xxxx xxxx xxxx xxxx என்று எழுதவேண்டும்.
  - ⇨ எஸ் பேங்க் கிளைகளிலும் கார்டு உறுப்பினர் தொகை செலுத்தலாம். கார்டு கணக்கில் தொகை செலுத்த பொருந்தும் கட்டணம் குறித்த விபரங்கள் கட்டண அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.
- மாதாந்திர அறிக்கைகளை முறையாகப் பெறுவதில் சிக்கல் இல்லாமல் இருக்க, கார்டு உறுப்பினரின் தொடர்பு முகவரி/மின்னஞ்சல் முகவரியில் ஏதேனும் மாற்றம் இருந்தால் கார்டு உறுப்பினர் தாமதிக்காமல் அதை எஸ் பேங்கிற்குத் தெரியப்படுத்திவிட வேண்டும்.
- அறிக்கை/பில்லிங் தகறாறுகள்: கார்டு அறிக்கையிலுள்ள தவறுகள், அவ்வாறு ஏதேனும் இருந்தால், அறிக்கை அச்சடிக்கப்பட்ட தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் கார்டு உறுப்பினர் எழுத்து பூர்வமாக எஸ் பேங்கிற்கு தெரிவிக்காத போது, அறிக்கையிலிருக்கும் விபரங்கள் சரியானவை என்று கார்டு உறுப்பினர் ஏற்றுக்கொண்டிருப்பதாகக் கருதப்படும். இவ்வாறு கிடைக்கும் குறை கூறும் தகவல் அடிப்படையில், விசாரனை செய்வதற்கு முன்னதாக, தற்காலிகமாக அறிக்கையிலிருக்கும் கட்டணம் திருத்தப்படும். விசாரனை நடந்து முடிந்த பிறகு, அறிக்கையில் எழுதப்பட்டிருந்த கட்டணம் முறையானது என்று நிரூபிக்கப்பட்டால், அக் கட்டணம் கார்டு உறுப்பினரின் அடுத்த அறிக்கையில் சேர்க்கப்பட்டுவிடும், இவ்வாறு சேர்க்கப்படும் கட்டணத்துடன் அதனுடன் தொடர்புடைய இதர பிற செலவினங்களும் அறிக்கையில் கூட்டப்பட்டிருக்கும்.

- குறைந்த பட்ச நிலுவை தொகையை மட்டுமே மாதா மாதம் செலுத்தும் போது, தொகையைச் திருப்பிச் செலுத்தும் காலம் வருடக் கணக்கில் நீட்டிக்கப்படலாம், பாக்கியிருக்கும் நிலுவைத் தொகை மீது வட்டி கட்டணங்களும் கூடிக் கொண்டிருக்கும் என்பதை தயவுசெய்து கவனத்தில் கொள்ளுங்கள்.
- பில்லிங் மற்றும் அறிக்கை சம்பந்தப்பட்ட அனைத்து சந்தேகங்கள் மற்றும் பிரச்சனைகளைத் தீர்த்துகொள்ள கார்டு உறுப்பினர் எஸ் பேங்க் கிரிடிட் கார்டுகள் பிரிவுடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

⇨24 x 7 எஸ் டச் வாடிக்கையாளர் சேவை எண்.: 1800 103 6000/ 022-49350000

⇨தபால் மூலமாக - எஸ் பேங்க் லிமிடெட், ஒன் இந்தியா புல்ஸ் பார்க், நெ.14, 3-வது மெயின் ரோடு, அம்பத்தூர் இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 058

⇨மின்னஞ்சல் மூலமாக yesfirstcc@yesbank.in

## 5. தவணை தவறலும் சூழ்நிலைகளும்

ஒருவேளை கார்டு உறுப்பினர் செலுத்த வேண்டிய நிலுவை தொகையில் குறைந்த பட்ச நிலுவை தொகையைக் கூட கெடு தேதியில் செலுத்த தவறும் போது, இந்திய ரிசர்வ் வங்கி (RBI) அங்கீகரித்திருக்கும் நாணயநிலைய பதிவகத்திற்கு (கிரிடிட் ப்யூரோ) 'கெடுமுடிந்த' கணக்கு என்று மாதாந்திர தகவலில் இக் கணக்கும் சேர்க்கப்படும். குறைந்த பட்ச நிலுவை தொகை கூட செலுத்தாத போது கிரிடிட் கார்டு சேவைகளில் இடையூறுகள் விளையும். கார்டு உறுப்பினருக்கு அனுப்பப்படும் அடுத்தடுத்த அறிக்கைகளில் அவர்/அவள் தன்னுடைய பாக்கி தொகையைச் செலுத்த நினைவூட்டப்படுவார். கார்டு உறுப்பினர் தான் செலுத்த வேண்டிய தொகையைச் செலுத்தியதும், நாணயநிலைய பதிவகத்திற்கு அனுப்பப்படும் அடுத்த மாதாந்திர தகவலில் அவர் கணக்கு 'நடப்பு' என்று புதுப்பிக்கப்படும்.

கார்டு உறுப்பினர் ஒருவேளை தவணை தவறும் பட்சத்தில், கார்டு கணக்கில் அவர் செலுத்த வேண்டிய தொகையை வசூலிக்கும் முகமாக உரிய தகவல் அனுப்பும் வழிகளில் மற்றும்/அல்லது மூன்றாம் நபரிடம் தொகையை வசூலிக்கும் பொறுப்பை ஒப்படைப்பது உட்பட, அவருக்கு அடிக்கடி நினைவூட்டல்கள் அனுப்பப்படும். இவ்வாறு நியமிக்கப்படும் மூன்றாம் நபர் கடன் தொகையை வசூலிக்கும் விசயத்தில் நடத்தை நெறிமுறைகளுக்கு முழுமையாக இணங்கி நடந்து கொள்வார்.

## 6. உரிமைத் தகுதி

கார்டு கணக்கில் எஸ் பேங்கிற்குச் செலுத்த வேண்டிய பாக்கி தொகையை எஸ் பேங்க் கோரிக்கை செய்யும் தொகை செலுத்த வேண்டிய தேதிக்குள் கார்டு உறுப்பினர் செலுத்தத் தவறும்போது, எஸ் பேங்கின் பொறுப்பில் / கார்டு உறுப்பினர் மற்றும் / அல்லது ஆட்-ஆன் உறுப்பினருக்குச் சொந்தமான அனைத்து கணக்குகளில் இருக்கும் அனைத்து தொகை மீது, அனைத்து சமயங்களிலும் மற்றும் முன்னறிவிப்பு தேவையில்லாமல், ஈடுசெய்வதற்காக ஒதுக்கீடு செய்யும் உரிமையை எஸ் பேங்க் கொண்டிருக்கும்.

## 7. கார்டு உறுப்பினத்துவம் ரத்து / முடித்துக்கொள்ளுதல்

- கார்டு உறுப்பினர் எப்பொழுது வேண்டுமானாலும் எஸ் பேங்கிற்கு கீழேயுள்ள முகவரியில் எழுத்து பூர்வமாகத் தெரிவித்து தன் உறுப்பினத்துவத்தை முடித்துக் கொள்ளலாம்:
- **எஸ் பேங்க் லிமிடெட், ஒன் இந்தியா புல்ஸ் பார்க், நெ.14, 3-வது மெயின் ரோடு, அம்பத்தூர் இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600058.** தகவல் தெரிவிக்கும் கடிதத்துடன் அவர் தன்னுடைய கார்டை குறைந்த பட்சம் 4 துண்டுகளாக வெட்டி இணைத்துவிட வேண்டும். எழுத்து பூர்வமாகச் செய்துகொண்ட கோரிக்கை அடிப்படையில் ஆட்-ஆன் கார்டுகள் உட்பட அனைத்து கார்டுகளும் நிறுத்தப்பட்டுவிடும். துண்டுகளாக வெட்டப்பட்ட கார்டு மற்றும் கார்டு கணக்கில் நிலுவை தொகை முழுவதும் செலுத்தப்பட்ட பிறகே கார்டு பயன்பாடு ரத்து செய்வது அமலாக்கப்படும். ஆண்டு கட்டணம், சேர்க்கை அல்லது புதுப்பித்தல் கட்டணங்கள் எதுவும் விகிதப்படி திருப்பிக் கொடுக்கப்படாது.
- கிரிடிட் கார்டு பயன்பாட்டில் ஏதேனும் இயல்புக்கு மாறான மற்றும் வழக்கமில்லாத பயன்பாடுகளை எஸ் பேங்க் கவனிக்க நேர்ந்தால், பயன்பாட்டின் முறை மற்றும் சரியாகப் பயன்படுத்தப்படுகிறதா என்று விசாரிக்க கார்டு உறுப்பினர் வங்கியுடன் பதிவு செய்துகொண்டிருக்கும் தொலைபேசியில் எஸ் பேங்க் அவருடன் தொடர்புகொள்ள முயற்சிக்கும்.
- ஒருவேளை எஸ் பேங்க் கார்டு உறுப்பினருடன் தொடர்புகொள்ள இயலவில்லை எனும் போது, கார்டு உறுப்பினரின் நன்மை கருதி மற்றும் / அல்லது பாதுகாப்பு காரணங்களுக்காக, முன்னறிவிப்பு எதுவும் செய்யாமல் கார்டு பயன்பாட்டைக் கட்டுப்படுத்துவது அவசியம் என்று எஸ் பேங்க் கருதுமானால், எஸ் பேங்க் கார்டு பயன்பாட்டை முடக்கி வைக்கும் அல்லது நிராகரித்து விடும்.
- கார்டு உறுப்பினர் தொகை செலுத்துவதில் தவணை தவறும் போது அல்லது அவருக்கு அளிக்கப்பட்டிருக்கும் கிரிடிட் வரம்புகளை மீறும் போது, எஸ் பேங்க் கிரிடிட் கார்டு வசதியை தற்காலிகமாக நிறுத்திக்கொள்ளும். கார்டு உறுப்பினர் ஒப்பந்தம் முடிவடைந்திருக்கும் நிலையில் அல்லது கார்டு தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கும் போது கிரிடிட் கார்டைப் பயன்படுத்தக் கூடாது. இது போன்ற சமயத்தில் கார்டு உறுப்பினர் அவர் கார்டு கணக்கில் நிலுவையிலிருக்கும் மொத்த தொகையை (தவணை தவறுதல் அல்லது சட்டபூர்வமாகத் தேவைப்படும் அறிக்கை வரம்புக்கு உட்பட்டு) உடனே எஸ் பேங்கிற்கு செலுத்திவிட வேண்டும். இதில் கார்டு உறுப்பினர் ஒப்பந்தத்தில் எஸ் பேங்கிற்கு செலுத்த வேண்டியவை என்று குறிப்பிட்டிருக்கும் அனைத்து தொகைகளும் மற்றும் அனைத்து நடவடிக்கைகள், கார்டு கணக்கில் இன்னும் பற்று வைக்கப்படாத தொகைகள் ஆகியவையும் அடங்கும். கார்டு உறுப்பினர் கார்டு கணக்கில் பாக்கியிருக்கும் அனைத்து தொகையையும் முழுவதுமாகச் செலுத்தாத வரையில் கிரிடிட் கார்டு முடித்துக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படாது.
- கார்டு உறுப்பினரின் மரணம் அல்லது திறன் இழக்கும்போது கார்டு உறுப்பினருக்கு வழங்கப்பட்ட கார்டு மற்றும் ஆட்-ஆன் கார்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட கார்டு அனைத்தும் தானாக ரத்து செய்யப்பட்டு விடும். அரசு/ஒழுங்குமுறை அமைப்பு அளிக்கும் தகவல் அடிப்படையில் கிரிடிட் கார்டு கணக்கில் நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்படலாம். கார்டு உறுப்பினரின் மரணம் அல்லது கொண்மநலிவு காரணமாக, எதுவாக இருந்தாலும், கிரிடிட் கார்டு கணக்கிலிருக்கும் நிலுவை தொகை உடனடியாக செலுத்த வேண்டியவையாகக் கருதப்படும், நிலுவை தொகை முழுவதையும் உடனே செலுத்துவதற்கான கார்டு உறுப்பினரின் பொறுப்புகளுக்கு எந்த பங்கமும் இல்லாமல், நடப்பிலிருக்கும் சட்ட விதிமுறைகளை அனுசரித்து எஸ் பேங்க் நிலுவை தொகையை வசூலிக்கும் உரிமை பெற்றிருக்கும்.

## 8. கார்டு காணாமல் போதல் / திருடப்படுதல் / தவறான பயன்பாடு

- ஒருவேளை பிரைமரி அல்லது கூடுதலாக வழங்கப்பட்ட கார்டு ஏதேனும் காணாமல் போய்விட்டால், கைபிசகாக எங்கேயாவது விட்டுவிட்டால், திருடப்பட்டிருந்தால், கார்டு நாசமாகியிருந்தால் அல்லது அனுப்பப்பட்ட கார்டு உங்களுக்கு உரிய நேரத்தில் கிடைக்காமலிருந்தால் அல்லது கார்டு சொந்தக்காரரின் அனுமதியில்லாமல் பயன்படுத்தப்படுவதாக உங்களுக்கு சந்தேகம் தோன்றினால், கார்டு உறுப்பினர் இத் தகவலை எங்கள் 24x7 எஸ் டச் வாடிக்கையாளர் சேவை எண்ணில் (பக்கம் 9ல் குறிப்பிட்டுள்ளபடி) உடனே தெரியப்படுத்திவிட வேண்டும்.
- கார்டுதாரர் அங்கீகாரம் ஏதுமற்ற ஏதேனும் எலக்ட்ரானிக் வங்கி பரிவர்த்தனை நிகழ்ந்து விட்டால், அதுபற்றி அந்த பரிவர்த்தனை நிகழ்ந்த உடனேயே, வங்கிக்கு விரைவாக தெரிவிக்க வேண்டும். ஏனெனில் வங்கிக்கு தெரிவிப்பதற்கு நீண்ட நாட்கள் எடுத்துக்கொள்ளும்போது வங்கிக்கும் /கார்டு தாரருக்கும் இழப்பின் அபாயம் அதிகமாக இருக்கும்.
- **ஒரு வாடிக்கையாரின் வரம்புக்குட்பட்ட பொறுப்பு**
- ஒரு வாடிக்கையாளர் கீழ்க்கண்ட விஷயங்களில் அங்கீகாரமற்ற பரிவர்த்தனை கள்காரணமாக ஏற்படும் நஷ்டத்துக்கு பொறுப்பு ஆகிறார்:
- வாடிக்கையாளரின் அலட்சியத்தின் காரணமாக ஏற்படும் நஷ்டம்.. அதாவது அவர் பணம் செலுத்தும் விவரங்களை பிறருடன் பகிர்ந்து கொள்ளும் செயல். வாடிக்கையாளர் வங்கிக்குக்கு அங்கீகாரமற்ற பரிவர்த்தனையை பற்றி தெரிவிக்கும் வரை முழுமையான நஷ்டத்துக்கு பொறுப்பாவார்.
- அங்கீகாரமற்ற எலக்ட்ரானிக் வங்கி பரிவர்த்தனைக்கான பொறுப்பு வங்கியுடையதுமல்ல, வாடிக்கையாளருடையதுமல்ல ஆனால் சிஸ்டத்தில் ஏதேனும் ஒரு அம்சம் அதற்கு பொறுப்பாகிறது என்றால் மற்றும் இத்தகைய பரிவர்த்தனையைப் பற்றி வங்கிக்கு தெரிவிப்பதில் வாடிக்கையாளரின் தரப்பில் தாமதமாகிறது (வங்கியிலிருந்து தகவல் கிடைத்த பின்பு நான்கு முதல் ஏழு அலுவல் நாட்கள் வரை) வாடிக்கையாளரின் பரிவர்த்தனை பொறுப்பு, பரிவர்த்தனை மதிப்பு அல்லது அட்டவணை 1ல் குறிப்பிடப்படும் தொகை இதில் எது குறைவோ அதுவாக இருக்கும்.

அட்டவணை 1

| கணக்கின் வகை | அதிகபட்ச பொறுப்பு (₹) |
|---|---|
| ₹5 லட்சம் வரையிலான வரம்புடன் கிரெடிட் கார்டுகள் | ₹10,000 |
| ₹5 லட்சத்துக்கு அதிகமான வரம்புடன் கிரெடிட் கார்டுகள் | ₹25,000 |

மூன்றாம் தரப்பினரின் தவறுகளால் வாடிக்கையாளரின் ஒட்டுமொத்த பொறுப்பு நிலையில் வாடிக்கையாளர் அல்லது வங்கி இந்த குறைபாட்டுக்கு பொறுப்பில்லை, ஆனால் சிஸ்டத்தில் எங்கோ பொறுப்பு என்றால், அது பற்றிய விபரம் அட்டவணை 2ல் சுருக்கமாக குறிப்பிடப்படுகிறது:

அட்டவணை 2

**வாடிக்கையாளரின் பொறுப்பு பற்றிய சுருக்கம்**

| தகவல் பெற்ற தேதியிலிருந்து மோசடி பரிவர்த்தனையைப் பற்றி தெரிவிக்க ஆகும் கால வரம்பு | வாடிக்கையாளின் பொறுப்பு (₹) |
|---|---|
| 3 அலுவல் நாட்களுக்குள் | ஜீரோ பொறுப்பு |
| 4 முதல் 7 அலுவல் நாட்களுக்குள் | பரிவர்த்தனை மதிப்பு அல்லது அட்டவணை 1ல் குறிப்பிடப்படும்தொகை இதில் எது குறைவோ அது |
| 7 அலுவல் நாட்களுக்கு மேல் | முழு பரிவத்தனை மதிப்பு (வங்கிக்கு ஜீரோ பொறுப்பு) |

- அட்டவணை 2ல் குறிப்பிடப்பட்டுள்ள அலுவல் நாட்களின் எண்ணிக்கை, வாடிக்கையாளர் கணக்கு வைத்துள்ள கிளையின் அலுவல் நாட்கள் பட்டியலின் படி கணக்கிடப்படும். இதில் தகவல் பெற்ற தேதி உட்படாது.
- நஷ்டம் எனில் மற்றும் கிரெடிட் கார்ட் திருடப்பட்டு விட்டது எனில், மேலே குறிப்பிட்டப்பட்டுள்ள வரம்புகளை வாடிக்கையாளர் பூர்த்தி செய்துள்ளார் எனும் பட்சத்தில், கார்டுதாரர் அந்த திருட்டு பற்றி காவல் துறைக்கும் தெரிவிக்க வேண்டியது அவசியம் மற்றும் ஒரு எஃப்ஐஆர் தாக்கல் செய்து காவல்துறை புகாரின் ஏற்பு நகலை வங்கிக்கு சமர்ப்பிக்க வேண்டும்.
- கார்டு உறுப்பினர் அல்லது ஆட்-ஆன் கார்டு உறுப்பினர் ஒப்புதல் இல்லாமல் அல்லது அவரிடமிருந்து பின் நம்பரைப் பெற்று யாரோ ஒருவர் தவறான நோக்கத்துடன் கார்டைப் பயன்படுத்தியதால் விளையும் அனைத்து இழப்புகளுக்கும் கார்டு உறுப்பினர் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்.
- ஒருவேளை கார்டு உறுப்பினர் கார்டை மோசடி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தியிருக்கும் பட்சத்தில், அதன் விளைவுகள் அனைத்திற்கும் கார்டு உறுப்பினர் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். ஜாக்கிரதை குறைவாக கார்டு பயன்படுத்தப்பட்டதால் விளையும் அனைத்து இழப்புகளுக்கும் கார்டு உறுப்பினர் பொறுப்பாவார்.
- எஸ் பேங்க் சரி என்று கருதும் விபரங்களை கார்டு உறுப்பினர் அல்லது ஆட்-ஆன் கார்டு உறுப்பினருக்கு முன்னறிவிப்பு ஏதும் கொடுக்காமல் காவல் துறையினர் அல்லது இதர பிற முறையான அதிகாரங்களுக்கு வழங்கி கார்டு அல்லது பின் இழப்பு, திருட்டு அல்லது முறையற்ற பயன்பாட்டை தெரிவிக்கும்.
- கார்டு காணாமல் போய்விட்டது என்று ஒரு முறை தகவல் தெரிவித்த பிறகு, ஒருவேளை கார்டு உறுப்பினருக்கு அது கிடைத்து விட்டாலும், எக்காலத்திலும் அதை மறுபடியும் பயன்படுத்தக் கூடாது. இவ்வாறு திரும்பக் கிடைத்திருக்கும் கார்டை பல துண்டுகளாக மேக்னெடிக் பட்டி மற்றும் இஎம்வி சிப் அழியும் விதத்தில் வெட்டி அழித்துவிட வேண்டும்.
- கார்டு உறுப்பினருக்கு கிரிடிட் கார்டுடன் வழங்கப்பட்டிருக்கும் பின் (பர்சனல் ஐடெண்டிஃபிகேஷன் நம்பர்) அல்லது கார்டு உறுப்பினர் தானாக தேர்ந்தெடுத்திருக்கும் பின் நம்பர் கார்டு உறுப்பினருக்கு மட்டுமே தெரிந்திருக்க வேண்டும். இது அவருக்கான சொந்த பயன்பாட்டிற்கானது, மாற்றத்தக்கதல்ல அத்துடன் இரகசியமானதும் கூட. மூன்றாம் நபர் ஒருவர் பயன்படுத்த இயலும் வகையில் அதை எந்த வடிவத்திலும் எழுதி வைத்திருக்கக் கூடாது. இப் பின் நம்பரை மூன்றாம் நபர் யாருக்கும், எஸ் பேங்க் பணியாளர்கள் அல்லது கடைக்காரர்கள் உட்பட, எந்த ஒரு சமயத்திலும் தானாகவோ அல்லது வேறு வகையிலோ தெரிவிக்கக் கூடாது. கார்டு உறுப்பினரின் பின் நம்பர் பத்திரக் குறைவுக்கு எஸ் பேங்க் மற்றும்/அல்லது அதன் பணியாளர்கள் / அதிகாரிகள் யாரும் பொறுப்பேற்க மாட்டார்கள்.

## ௯. குறைதீர்ப்பு வழிமுறைகள்

ஒருவேளை எங்கள் சேவைகளில் மற்றும்/அல்லது எஸ் பேங்க் தொடர்பு மையங்கள் அளிக்கும் பதில்களில் நீங்கள் திருப்தியடையவில்லை எனும்போது, 1800 103 6000 (கட்டணமில்லை) / 022-49350000 எண்ணில் எங்களுடன் தொடர்பு கொள்ளலாம் அல்லது **yesfirstcc@yesbank.in** முகவரியில் எழுதி தெரிவிக்கலாம். மேல்முறையீடு செய்வதற்கு எங்கள் முக்கிய கிளை அதிகாரி திரு. ரத்தன் குமார் கேஷ், எஸ் பேங்க் லிமிடெட், 22ம் தளம், ஐஎஃப்சி, எஸ் பேங்க் டவர், எல்ஃபின்ஸ்டன் ரோடு (மே), மும்பை - 400013, மின்னஞ்சல்: principal.nodalofficer@yesbank.in முகவரியில் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9:30 முதல் மாலை 05:30 நேரத்தில் தொடர்பு கொள்ளலாம் அல்லது 0124-4619044 எண்ணில் கூப்பிட்டுப் பேசலாம்.

மேலே கொடுக்கப்பட்டிருக்கும் வழிமுறைகளிலிருந்து உங்கள் குற்றச்சாட்டுக்கு எந்த பதிலும் ஒரு (1) மாதத்திற்குள் கிடைக்கவில்லை என்றால், அல்லது உங்களுக்குக் கிடைத்த பதில் திருப்திகரமாக இல்லை என்றால், பேங்கிங் ஓம்பட்ஸ்மேன் அமைப்புக்கு நடுநிலையாக பரிசீலனை செய்யும் முகமாக விபரங்களைத் தெரிவிக்கலாம். பேங்கிங் ஓம்பட்ஸ்மேன் திட்டம் மற்றும் குறைதீர்க்கும் வழிமுறை விபரங்களைத் தெரிந்துகொள்ள www.rbi.org.in இணையதள பக்கத்தைப் பார்க்கவும்.

## ௧0. தகவல் அளிப்பு மற்றும் முக்கிய ஒழுங்குபடுத்தும் செய்திகள்

- கார்டு உறுப்பினருக்கு முன்னறிவிப்பு எதுவும் அளிக்காமல், அமலிலிருக்கும் வர்த்தக நடவடிக்கைகளுக்கு இணங்கி கிரிடிட் கார்டு (கார்டுகள்) சார்ந்த விபரங்களை (கிரிடிட் ப்யூரோ) நாணயநிலைய பதிவகத்திற்கு (நடப்பில் உள்ளது அல்லது எதிர்காலத்தில் நிறுவப்படுவது) வங்கி தெரியப்படுத்தும் என்பதை கார்டு உறுப்பினர் ஏற்றுக்கொள்கிறார்.
- கார்டுதாரின் வசமுள்ள கிரெடிட் கார்டு அப் கிரேட் /டவுண் கிரேட் செய்து கொள்ளப்படுவது கார்டுதாரரின் தகுதி மற்றும் வங்கியின் சுய தீர்மானத்தைப் பொறுத்தது. மேலும் இது நீட்டிக்கப்படலாம் மற்றும் இதுதான் என்ற வரம்பின்றி, கார்டுதாரருக்காக ஒதுக்கப்பட்டுள்ள கிரெடிட் வரம்பும் மாற்றி அமைக்கப்படலாம்.
- நிதியியல் அமைப்பின் நிருவாகம் மற்றும் கட்டுக்கோப்பை மேம்படுத்தும் நோக்கத்துடன் இந்திய அரசும் இந்திய ரிசர்வ் வங்கியும் கூட்டாக அமைத்திருக்கும் நிறுவனம் 'த கிரிடிட் இன்ஃபர்மேஷன் பியூரோ இந்தியா லிமிடெட் (சிஐபிஐஎல்). கடன் தகவல் நிறுவனங்கள் விதிகள் மற்றும் கட்டுப்பாடு சட்டம், 2005 விதிகளை அனுசரித்து இந்த அமைப்பில் பங்கேற்றிருக்கும் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் அனைத்தும் வாடிக்கையாளர் விபரங்களை சிஐபிஐஎல்/இதர பிற நாணயநிலைய பதிவகங்களுடன் பகிரிந்துகொள்ள வேண்டும். ஆகையால், கார்டு உறுப்பினர் கிரிடிட் கார்டு (கார்டுகள்) தவணை தவறும் போது, முன்னறிவிப்பு செய்து அது சம்பந்தப்பட்ட எந்த தகவலையும் சிஐபிஐஎல் மற்றும் இதர பிற (கிரிடிட் ப்யூரோ) நாணயநிலைய பதிவகத்திற்கு (நடப்பில் உள்ளது அல்லது எதிர்காலத்தில் நிறுவப்படுவது) எஸ் பேங்க் தெரியப்படுத்தும். எஸ் பேங்கிற்குப் பணம் செலுத்தப்பட்டவுடன், அந்த தகவல் சிஐபிஐஎல்/இதர பிற நாணயநிலைய பதிவகங்களுக்கு 60 நாட்களுக்குள் அனுப்பப்பட்டு தகவல் புதுப்பிக்கப்படும்.
- ஒழுங்குக்கு புறம்பாக கார்டு உறுப்பினர் பற்றிய விபரங்களை நாணயநிலைய பதிவகங்களுக்கு, கார்டு உறுப்பினர் பில்லிங் தகராறு ஒன்றை எழுப்பியிருந்த போதிலும், தெரிவிக்கும் உரிமையை எஸ் பேங்க் தன்னிடம் தக்க வைத்துக்கொள்கிறது; இந்த தகராறு குறித்து எஸ் பேங்க் ஏற்கனவே ஏற்கத்தகாத தகராறு என்று அறிவித்திருக்கலாம் அல்லது இது போன்ற தகராறுகளை எழுப்ப எஸ் பேங்க் நிர்ணயித்திருக்கும் காலவரை கடந்து குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டிருக்கலாம் மற்றும்/அல்லது பின் நம்பர் அல்லது ஒன் டைம் பாஸ்வெர்டு பயன்படுத்தப்பட்டது சம்பந்தப்பட்ட தகராறாக இவை இருக்கலாம்.
- இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ) வகுத்திருக்கும் பொருந்தும் வழிநடத்தல் குறிப்புகளைப் பின்பற்றி கிரிடிட் கார்டு இயக்கம் சார்ந்த நடவடிக்கைகளை நிருவகிக்க எஸ் பேங்க் தன் சுய விருப்பத்தில் படி நியமித்திருக்கும் சேவை வழங்குபவர்களிடம், இவர்கள் இந்தியாவில் அல்லது வெளிநாட்டில் இருக்கலாம், எஸ் பேங்க் குழுமத்தைச் சார்ந்த ஒன்றாக அல்லது மூன்றாம் நபராக இருக்கலாம், ஒப்படைக்கும் உரிமையை எஸ் பேங்க் தன்னிடம் தக்கவைத்துக் கொள்கிறது. கிரிடிட் கார்டு இயக்கங்கள் சார்ந்த நடவடிக்கைகளுக்கு, குறிப்பிட்ட சம்மதம் எதுவும் தேவைப்படாமல் கார்டு உறுப்பினர் (உறுப்பினர்கள்) கணக்கு / விண்ணப்பம் குறித்த விபரங்களை இது போன்ற சேவை வழங்குபவர்களுக்கு அளிக்க / பகிர்ந்து கொள்ள எஸ் பேங்க் உரிமை பெற்றிருக்கும்.
- கார்டு உறுப்பினர் மற்றும் எஸ் பேங்க் பிரதிநிதிக்கு இடையே நடக்கும் குறிப்பிட்ட உரையாடல்களை, எஸ் பேங்க் தன் சுய விருப்பத்தின் படி, குறை தீர்ப்பு சம்பந்தப்பட்ட உரையாடல் அல்லது தொகை வசூலிப்பு சார்ந்த உரையாடல் அல்லது வேறு உரையாடல்களாகவும் இருக்கலாம், பதிவு செய்து வைத்துக்கொள்ளும் என்பதை எஸ் பேங்க் கார்டு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறது.
- குறிப்பிட்ட கிரிடிட் கார்டு வகைகளில் இலவச காப்பீடு சலுகையும் வழங்கப்படும். கிரிடிட் கார்டு ஆரம்பமாகும் தினத்திலிருந்து இக் காப்பு அமலில் வரும். இது சம்பந்தமான கூடுதல் விபரங்களைத் தெரிந்துகொள்ள, எஸ் பேங்க் இணையதள பக்கத்தைப் பார்க்கவும்.
- பற்பல புதிய சிறப்பம்சங்கள் / புராடெக்டுகள் / விளம்பர சலுகைகள் என்று அவ்வப்போது எஸ் பேங்க் கார்டு உறுப்பினர்களுக்கு உதவும் நன்மைகளை அறிமுகம் செய்யும், இதற்காக மூன்றாம் நபர் முகமைகள் உதவிகளையும் பெறும். இது போன்ற செய்திகளை தொலைபேசி அழைப்பு / எஸ்எம்எஸ் மூலம் பெற ஒருவேளை கார்டு உறுப்பினர் விரும்பவில்லை என்றால், அவர்/அவள் 'டு நாட் கால்' சேவையில் பதிவு செய்துகொள்ளலாம். வாடிக்கையாளர் சேவையைக் கூப்பிட்டு அல்லது www.yesbank.in பக்கத்திற்குச் சென்று இச் சேவையில் பதிவு செய்துகொள்ளலாம்.
- இந்தியாவிற்கு வெளியே எஸ் பேங்க் கிரிடிட் கார்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது அவை கண்டிப்பாக இந்திய ரிசர்வ் வங்கியின் செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குமுறைகள் மற்றும் அந்நிய செலாவணி மேலாண்மைச் சட்டம், 1999 விதிமுறைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். இந்தியாவில் வாழும் கார்டு உறுப்பினர்கள் இந்தியாவிற்கு வெளியே நேரடியாக / மறைமுகமாக எந்த வகையிலும் எலக்டிரானிக் / இன்டர்நெட் டிரேடிங் போர்டல்ஸ் மூலமாக பணம் பெறுதல் அல்லது அனுப்புதல் நடவடிக்கையாக அந்நிய செலாவணி வர்த்தகத்தில் ஈடுபடுவது தடுக்கப்படுகிறது என்பது தெரிவித்துக்கொள்ளப்படுகிறது, இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் கார்டு உறுப்பினர் அந்நிய செலாவணி மேலாண்மைச் சட்டட்டம் (ஃபிமா), 1999 விதிமீறல்கள் குற்றம் புரிந்தவராகக் கருதப்படுவதுடன், உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்துகொள்ளுங்கள் (கேஓய்சி) விதிமுறைகள் / ஆன்டி மணி லாண்டரிங் (ஏஎம்எல்) வழக்கங்களையும் மீறியவராகக் கருதப்படுவார். செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குமுறைகளை பங்கப்படுத்தும் வகையில் எஸ் பேங்க் கிரிடிட் கார்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கார்டு உறுப்பினர் அவருடைய நடவடிக்கைகளுக்கு அவர் மட்டுமே பொறுப்பேற்க வேண்டும்.
- சர்வதேச கிரிடிட் கார்டுகளை இணையதளங்களில் அல்லது வேறு விதமாகப் பயன்படுத்தி லாட்டரி டிக்கெட்டுகள், தடை செய்யப்பட்ட அல்லது வரையறைக்குட்பட்ட சஞ்சிகை வாங்குதல், குதிரைப்பந்தயச் சூதாட்டத்தில் பங்கேற்றல், திரும்பக் கூப்பிடுச் சேவைக்குப் பணம் செலுத்துதல் மற்றும் / அல்லது அது போன்ற உருப்படிகளை வாங்குதல் / நடவடிக்கைகளில் ஈடுபடுதல் போன்ற தடை செய்யப்பட்ட உருப்படிகளுக்காக அந்நிய செலாவணி பயன்படுத்த அனுமதி இல்லை என்பதால் பயன்படுத்த இயலாது.

<table>
<tr><th colspan="7">கட்டணங்கள் அட்டவணை - எஸ் பேங்க் கிரிடிட் கார்டுகள்</th></tr>
<tr><td></td><td colspan="6">எஸ் ஃபஸ்ட்: பிரெஃபெர்டு/பிரெஃபெர்டு ஃபார் என்ஆர்ஐ/ ஃபிக்செட் டெபாசிட் மீது வழங்கப்படும் பிரெஃபெர்டு/ எக்ஸ்க்ளூசிவ்/எக்ஸ்க்ளூசிவ் ஃபார் என்ஆர்ஜ/பிசினஸ்</td></tr>
<tr><td>சேர்க்கை கட்டணம்</td><td colspan="6">இல்லை</td></tr>
<tr><td>ஆண்டு உறுப்பினர் கட்டணம்<br>(முதல் வருடம் மற்றும் புதுப்பித்தல்)</td><td colspan="6">பிரெஃபெர்டு/பிரெஃபெர்டு ஃபார் என்ஆர்ஜ/ஃபிக்செட் டெபாசிட் மீது வழங்கப்படும் பிரெஃபெர்டு: ₹2,500/-, எக்ஸ்க்ளூசிவ்/எக்ஸ்க்ளூசிவ் ஃபார் என்ஆர்ஜ: ₹10,000/-, பிசினஸ்: ₹5,000 + உரித்தாகும் வரிகள் (முதல் ஆண்டுக்கு. முதல் அறிக்கையில் கட்டணம் விதிக்கப்படுகிறது. ஒவ்வொரு புதுப்பித்தலுக்கும் ஆண்டு கட்டணம். புதுப்பித்தலுக்கு பின்பு முதல் அறிக்கையில் விதிக்கப்படுகிறது)</td></tr>
<tr><td>ஆண்டு கட்டணங்களுக்கு சலுகை பெற செலவு செய்ய வேண்டிய நிபந்தனைகள்<br>(ரீடெய்ல் செலவு நடவடிக்கைகளுக்கு மட்டும் பொருந்தும்)</td><td colspan="6">உரித்தாகாது</td></tr>
<tr><td>வட்டி இல்லாத பீரியட்</td><td colspan="6">50 நாட்கள் வரையில்</td></tr>
<tr><td>குறைந்த பட்ச நிலுவை தொகை (MAD)</td><td colspan="6">அறிக்கையில் காணப்படும் செலுத்த வேண்டிய மொத்த நிலுவை தொகையில் 5% அல்லது ₹200, எது அதிகமோ அது</td></tr>
<tr><td>முன்பணம் ரொக்கம் வரம்பு</td><td colspan="6">கிரிடிட் வரம்பில் 30%</td></tr>
<tr><td>ஆட்-ஆன் கார்டு கட்டணம்</td><td colspan="6">சேர்க்கை கட்டணம் இல்லை, ஆண்டு கட்டணம் இல்லை<br>(அதிக பட்சம் 3 கார்டுகள் வரை வழங்கப்படும்)</td></tr>
<tr><td>சுழல் கடன், முன் பணம் ரொக்கம் மற்றும் / அல்லது கெடு முடிந்த தொகை மீது நிதி கட்டணங்கள்</td><td colspan="6">எக்ஸ்க்ளூசிவ்/எக்ஸ்க்ளூசிவ் ஃபார் என்ஆர்ஜ: எஸ் பேங்க் சேவிங்ஸ் அல்லது சேலரி அக்கவுண்ட் தாரர்கள்: மாதத்துக்கு 1.20% (அதாவது 14.40% வருடாந்திரமாக்கப்பட்டது), மற்றவை: மாதத்துக்கு 1.99% (அதாவது 23.88% வருடாந்திரமாக்கப்பட்டது)<br>பிரெஃபெர்டு/பிரெஃபெர்டு ஃபார் என்ஆர்ஜ: எஸ் பேங்க் சேவிங்ஸ் அல்லது சேலரி அக்கவுண்ட் தாரர்கள்: மாதத்துக்கு 1.99% (அதாவது 23.88% வருடாந்திரமாக்கப்பட்டது), மற்றவை: மாதத்துக்கு 2.75% (அதாவது 33.00% வருடாந்திரமாக்கப்பட்டது)<br>ஃபிக்செட் டெபாசிட் மீது வழங்கப்படும் பிரெஃபெர்டு: மாதத்துக்கு 1.79% (அதாவது 21.48% வருடாந்திரமாக்கப்பட்டது)<br>பிசினஸ் கார்டுகள்: எஸ் பேங்க் கரண்ட்/சேவிங்ஸ்/பிசினஸ் அக்கவுண்ட் தாரர்களுக்கு: மாதத்துக்கு 1.99% (அதாவது 23.88% வருடாந்திரமாக்கப்பட்டது), மற்றவை: மாதத்துக்கு 2.75% (அதாவது 33.00% வருடாந்திரமாக்கப்பட்டது)</td></tr>
<tr><td rowspan="2">தாமதமாகச் செலுத்துதல் கட்டணங்கள் (எல்பிசி)<br>(ஒவ்வொரு அறிக்கையும், ஒவ்வொரு இருப்பு அறிக்கையைப் பொறுத்து)</td><td>அறிக்கை இருப்பு தொகை</td><td>< ₹100</td><td>₹101-500</td><td>₹501-5,000</td><td>₹5,001-20,000</td><td>> ₹20,000</td></tr>
<tr><td>எல்பிசி</td><td>இல்லை</td><td>₹100</td><td>₹400</td><td>₹500</td><td>₹700</td></tr>
<tr><td>வரம்பு கடந்த தொகை கட்டணம்</td><td colspan="6">வரம்பு கடந்த தொகை மீது 2.5% அல்லது ₹500, எது அதிகமோ அது</td></tr>
<tr><td>முன் பணம் ரொக்கம் கட்டணம்</td><td colspan="6">ரொக்கம் எடுக்கப்பட்ட தொகை மீது 2.5% அல்லது ₹300, எது அதிகமோ அது</td></tr>
<tr><td>பேமென்ட் திருப்புதல் கட்டணம்: காசோலை/ஆட்டோ பே</td><td colspan="6">₹350/- (ஒவ்வொரு தடவை காசோலை அல்லது ஆட்டோ பே திருப்பப்படுதல்)</td></tr>
<tr><td>ரிவார்ட் ரிடெம்ப்ஷன் கட்டணம்</td><td colspan="6">ரிடம்ப்ஷன் கோரிக்கைக்காக ₹100.<br>(எக்ஸ்க்ளூசிவ் நபர்களுக்கு விலக்கு/எக்ஸ்க்ளூசிவ் ஃபார் என்ஆர்ஜ)</td></tr>
<tr><td>இந்தியாவில் அனைத்து எரிபொருள் நிலையங்களிலும் எரிபொருள் கூடுதல் கட்டணம் தள்ளுபடி (எரிபொருள் கூடுதல் கட்டணம் மீது விதிக்கப்பட்ட சேவை வரி மற்றும் பிற உப வரி மாற்றப்படாது)</td><td colspan="6">₹400 முதல் ₹5,000 வரையிலான பரிவர்த்தனைகளுக்கு மட்டுமே பொருந்தும். ஒரு அறிக்கை காலவரம்பில் அதிகபட்ச சர்சார்ஜ் தள்ளுபடி. (பிரெஃபெர்டு/பிரெஃபெர்டு ஃபார் என்ஆர்ஜ/ஃபிக்செட் டெபாசிட் மீது வழங்கப்படும் பிரெஃபெர்டு: ₹500/-, எக்ஸ்க்ளூசிவ்/எக்ஸ்க்ளூசிவ் ஃபார் என்ஆர்ஜ/பிசினஸ்: ₹1,000</td></tr>
<tr><td>காணாமல் போன, திருட்டு அல்லது சேதமடைந்த கார்டுக்கு பதில் கார்டு வழங்குதல்</td><td colspan="6">₹100 (ஒரு வழங்கலுக்கு)</td></tr>
<tr><td>அந்நிய செலாவணி மாற்றும் கட்டணம்</td><td colspan="6">1.75%</td></tr>
<tr><td>வெளியூர் காசோலை கையாளுதல் கட்டணம்</td><td colspan="6">₹25 (பிரதி வெளியூர் காசோலைக்கு)</td></tr>
<tr><td>டூப்ளிகேட் அறிக்கை<br>(6 மாதங்களுக்கு முந்திய அறிக்கை)</td><td colspan="6">₹100 பிரதி அறிக்கைக்கு</td></tr>
<tr><td>வைபிஎல் கிளைகளில் கிரிடிட் கார்டுல பேமென்ட்களுக்கு ரொக்கம் செலுத்துதல்</td><td colspan="6">₹100 (01/01/2017 தேதியிலிருந்து செலுத்தப்படும் ரொக்க டெபாசிட்டுகள் மீது)</td></tr>
<tr><td>ரயில்வே டிக்கெட்களை வாங்குதல் அல்லது ரத்து செய்தல் மீதான கட்டணங்கள்.</td><td colspan="6">ஐஆர்சிடிசி / இந்திய இரயில்வேயின் பரிந்துரைப்படி</td></tr>
<tr><td>சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி)</td><td colspan="6">18% (அனைத்து கட்டணங்கள் மற்றும் செலவுகள் மீது பொருந்தும்)</td></tr>
</table>

எஸ் பேங்க்

www.yesbank.in

**எஸ் பேங்க் லிமிடெட்**

ஒன் இந்தியா புல்ஸ் பார்க், நம்பர் 14, 3ம் மெயின் ரோடு, அம்பத்தூர் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை-600 058.

24x7 எஸ் டச் வாடிக்கையாளர் சேவை நம்பர்கள்:

1800 103 6000 (இந்தியாவில் மொபைல் மற்றும் லாண்ட்லைன்களுக்கு கட்டணமில்லை)

+91 22 4935 0000 (இந்தியாவிற்கு வெளியிலிருந்து அழைக்கும் போது)

இணையதளம்: www.yesbank.in

மின்னஞ்சல் முகவரி: yesfirstcc@yesbank.in